**STARTING TIME 12.15 P.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 146/2019**

Deposition of **D.W.1** witnesses for Plaintiff Solemnly affirmed by Tr. R. Suresh Babu, Assistant of this court, on 23.06.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : **பிரமிளா** Husband's Name :

Address :

Calling : Age :

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. என்ன பரிகாரம் கேட்டு வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால், பாகப்பிரிவினை வேண்டி தாக்கல் செய்துள்ளார். நான் இவ்வழக்கில் 1–ம் பிரதிவாதியாக உள்ளேன் என்றால், சரிதான். தாவா சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்றால், என் தாத்தா வரதப்பஆச்சாரிக்கு பாத்தியப்பட்டது. அவர் தற்போது உயிருடன் இருக்கிறாரா என்றால், இல்லை, காலமாகிவிட்டார். தாவா சொத்து இதனால் வரை பாகம்பிரிக்கப்பட்டுள்ளதா என்றால், இல்லை. தாவா சொத்தை நாங்கள் கூட்டாக அனுபவித்து வருகிறோமா என்றால், ஆமாம்.

2. என் தாத்தா வரதப்ப ஆச்சாரிக்கு எத்தனை வாரிசுகள் என்றால், எனது அம்மா ராணி மட்டும் தான் ஒரே வாரிசு. எனது அம்மாவுக்கு எத்தனை வாரிசுகள் என்றால், நான் மட்டும் தான் ஒரே மகள், வேறு யாரும் இல்லை. தாவாவில் கோரியவாறு பாகம் பிரிக்க எனக்கு ஆட்சேபனை எதுவும் உள்ளதா என்றால், இல்லை.

வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

**2 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

3. எனது தகப்பனார் பெயர் என்னவென்றால் கிருஷ்ணமூர்த்தி ஆகும். எனது தகப்பனாருக்கும், எனக்கும் சுமூகமான பேச்சு வார்த்தை இருந்ததா என்றால், இருந்தது. எனது தகப்பனாரும், நானும் தற்போது வரை குன்னத்தூர் கிராமத்தில் ஒன்றாக தான் வசித்து வருகிறோம் என்றால், சரிதான். நான் எந்த வருடம் பிறந்தேன் என்றால், எனக்கு எழுத படிக்க தெரியாததால் அது பற்றி தெரியாது. எனக்கு தற்போது என்ன வயது என்றால், சுமார் 49 அல்லது 50 இருக்கும்.

4. இவ்வழக்கில் வாதிகளுக்கு ஆதரவாக எனது தகப்பனார் சாட்சியம் அளித்துள்ளார் என்றால், சரிதான். எனது தாத்தாவிற்கு குன்னத்தூர் கிராமத்தில் வீடு, நிலம் சொந்தமாக இருந்தது என்றால், சரிதான். குன்னத்தூர் கிராமத்தில் இருந்த சொத்துக்களை எனது தாத்தா வரதப்ப ஆச்சாரிக்கும், அவரது சகோதரர் நரசிம்ம ஆச்சாரிக்கும் பாகமாக கொடுக்கப்பட்டது என்றால், சரியல்ல, குன்னத்துர் கிராமத்தில் இருந்த வீடு மற்றும் நிலங்கள் 4 பாகமாக பிரிக்கப்பட்டது, அதில் எனது தாத்தா வரதப்ப ஆச்சாரி, அவரது சகோதரர்கள் நரசிம்ம ஆச்சாரி, சக்கரவர்த்தி ஆச்சாரி மற்றும் கோவிந்த ஆச்சாரி ஆகியோர்களுக்கு தலா ஒரு பாகம் கொடுக்கப்பட்டது.

5. அது போல் எனது தாத்தாவும், அவரது சகோதரர்களும் பாகமாக பிரித்துக் கொண்ட போது குன்னத்தூர் கிராமத்தில் எனது தாத்தாவிற்கு பாகமாக கொடுக்கப்பட்ட வீட்டில் தான் நானும், எனது தகப்பனாரும் தற்போது வசித்து வருகிறோம் என்றால், சரியல்ல. எனது தாத்தாவும், அவரது சகோதரர்களும் பாகம் பிரித்துக் கொண்ட போது ஆவணம் எதுவும் எழுதிக் கொண்டார்களா என்றால், இல்லை. கூர்சிட்டாவது எழுதிக் கொள்ளப்பட்டதா என்றால், இல்லை. எனது

தகப்பனார் வாதிகள் தரப்பில் சாட்சியம் அளித்த போது கூர்சீட்டு எழுதிக் கொண்டதாக சொல்லியுள்ளார் என்றும், அதை மறைத்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

6. மேற்படி பாகத்தில் நரசிம்ம ஆச்சாரிக்கு பாகமாக வந்த சொத்தினை அவரது மகனான 3–ம் வாதி பாலு விற்பனை செய்துவிட்டு, அந்த பணத்தை கொண்டு தக்கோலம் கிராமம், கல்லோத்தம்மன் கோவில் தெருவில் வீடு வாங்கினார் என்றால், பாகமாக வந்த சொத்தை விற்று வீடு வாங்கினார்களா அல்லது சம்பாதித்த பணத்தை கொண்டு வீடு வாங்கினார்களா என்று தெரியவில்லை.

7. எனது தாத்தாவும், அவரது சகோதரர்களும் பாகம் பிரித்துக் கொண்ட போது எழுதிய கூர்சீட்டை பார்த்தால் தான் உண்மை தெரியும் என்றால், அது போல் எதுவும் எழுதிக் கொள்ளவில்லை.

8. எனது பாட்டி பெயர் என்னவென்றால் சாரதாம்மாள், எனது அம்மா பெயர் என்னவென்றால் ராணி. மேற்படி இருவரும், எனது தாத்தாவின் காலத்திற்கு பிறகு விடுதலை பத்திர ஆவண எண். 5017/1979–ன்படி எனது தாத்தாவிற்கு சொந்தமான சொத்துக்களில் அவர்களுக்கு இருந்த உரிமையை கோவிந்தராஜ் ஆச்சாரி மற்றும் அவரது சக்கரவர்த்தி ஆச்சாரி ஆகியோர்களுக்கு விடுதலை செய்துக் கொடுத்துவிட்டார்கள் என்றால், சரியல்ல.

9. அதேபோல் கோவிந்தராஜ் ஆச்சாரி மற்றும் அவரது சக்கரவர்த்தி ஆச்சாரி ஆகியோர் குன்னத்தூர் கிராமத்தில் இருந்த சொத்துக்களில் அவருக்கு இருந்த உரிமையை ஆவண எண். 4970/1979 ஆவணம் மூலம் எனது பாட்டி மற்றும் அம்மாவிற்கு விடுதலை செய்துக் கொடுத்தார்கள் என்றால், சரியல்ல. தாவா சொத்தில் என் தாத்தாவிற்குண்டான பாகத்தை எனது அம்மாவும், பாட்டியும் ஏற்கனவே விடுதலை செய்துக் கொடுத்துவிட்டதால் எனக்கு தாவா சொத்தில் எவ்வித பாகமும் இல்லை என்றால், சரியல்ல. நானும், எனது அப்பாவும் ஒரே வீட்டில் வசித்து வரும் நிலையில் எல்லா உண்மையும் எனக்கு தெரியும் என்றும்,

அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. வாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

2 முதல் 6 வரை பிரதிவாதிகள் குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

1–ம் பிரதிவாதி தரப்பில் மறு விசாரணை இல்லை

**ENDING TIME 12.47. P.M**

**(Sd/-. G. Yuvaraj)**

**Special Subordinate Judge,**
**Special Sub Court for L.A.O.P. Cases,**
**Arakkonam.**